1973 நவம்பர் 23]

(இ) ஆம் எனில், எப்போது நீட்டிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) புன்னப்பாக்கம் கிராமத்திற்குச் செல்லும் சாலை, பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே 98-ம் எண் வழித்தடத்தை திருப்பி விடுவதோ நீட்டிப்பதோ சாத்தியமில்லை.

எண்ணெய் ஆலைகள் தொடக்கம்.

*357 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம தொழில் வாரிய பிரிவின் மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் தொடங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் துவங்கும் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் இருந்து, அதற்கு அறிக்கையும் சமர்ப்பித்தார்கள். ஒருவேளை அது கைவிடப்பட்டது என்றால் அவ்வாறு கைவிட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அரிசித் தவிட்டிலிருந்தும், செக்குப் புண்ணாக்கிலிருந்தும் எண்ணெய் எடுக்கும் திட்டம் மேற்கொள்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டம் நாமக்கல் பகுதியில் முதலாவதாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம வாரியத்தின் மூலமாக எண்ணெய் தயாரிப்புக்கென மின் விசையில் இயங்கும் செக்குகளை அறிமுகப் படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) எண்ணெய் தயாரிப்புக்கென மின்விசையில் இயங்கும் செக்குகளை நிறுவும் திட்டம் 1971-72 முதல் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) கிராமிய எண்ணெய் தொழிலில் ஈடுபட்டுள்ள எண்ணெய் உற்பத்தியாளர்களின் வருவாயைப் பெருக்கவும் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் பம்பாய் கதர்-கிராமத் தொழில் ஆயம் இத்திட்டத்தை புகுத்தியுள்ளது. கதர் ஆயம் மின் விசையால் இயங்கும் செக்குகளை நிறுவ ரூ. 3,000 கடனாக நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள மர செக்குகளுக்கு மின் விசையால் இயங்கும் உலக்கைகள் பொறுத்தப் படுகின்றன. இந்த உலக்கைகள் மும்முனை மின் இணைப்பால் இரண்டு குதிரை சக்தி மோட்டாரைக் கொண்டு இயக்கப்படுகின்றன. ஒரு மின் உலக்கையின் விலை இதர வரிகள் நீங்கலாக ரூ. 2,100 ஆகின்றது. கதர் ஆயம் வழங்கும் கடன் ரூ. 3,000-த்தில் மிகுதி தொகை மின்விசை செக்கை நிறுவும் செலவிற்கு பயன்படுகின்றது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மின்விசையால் இயங்கும் செக்குகளைத் தற்போது எந்த எந்தப் பகுதியில் அமைத்திருக்கிறார்கள் என்கிற விவரம் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எந்த எந்தப் பகுதியில் என்கிற விவரம் தற்போது என் கைவசம் இல்லை. ஆயினும் 1971-72-ம் ஆண்டுக்கு 54 மின்விசையில் இயங்கும் செக்குகளும், 1972-73-ம் ஆண்டுக்கு 61 மின்விசையினால் இயங்கும் செக்குகளும், இந்த நடப்பு ஆண்டு 1973-74-க்கு 250 மின்விசையினால் இயங்கும் செக்குகளும் நிறுவ கதர்-கிராமத் தொழில் வாரியம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : மின்விசைச் செக்குகள்—மின் வெட்டு வந்த பிறகு எத்தனை நடைமுறையில் இருந்திருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : அதுபற்றிய தகவல் தற்போது இல்லை.

1973 நவம்பர் 23]

திரு. கே. டி. கே. தங்கமணி: கதர்-கிராம தொழில் வாரியத்தின் மூலம் முன்பு கைக்குத்தல் அரிசிக்கு பண உதவி செய்யப்பட்டது அது சரியாக நடைபெறவில்லை என்றும் இந்த மன்றத்தில் சொல்லப் பட்டது. இப்போது செக்குத் தொழிலுக்குப் பணம் கொடுக்கப்படு கிறது. உண்மையில் செக்கு இருக்கிறதா என்று பார்த்துப் பண உதவி செய்யப்படுகிறதா? அம்மாதிரி இருந்தால் அந்த விவரம் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்தச் செக்குகளுக்குப் பணம் தனியார்களுக்கு நாம் வழங்குவதில்லை. கூட்டுறவுச் சங் கங்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நோக்கமே கிராமங்களில் வேலையில்லாதிருக்கிறவர்களுக்கு வேலை அளிக்க வேண்டும் என்பதுதான். கதரைப் பொறுத்தவரையில் ராட்டையில்தான் நூற்கவேண்டும் என்பதுபோய் மின்சாரத்தி னாலும் நூற்கலாம் என்று வந்துவிட்டது. இப்போது மின்விசைச் செக்குகளுக்குப் பணம் கொடுப்பதாகச் சொன்னால் கைச் செக்கு கள் என்ன ஆவது? இதனால் கிராமத்திலுள்ளவர்களுக்கு வேலை அளிக்கவேண்டும் என்கிற நோக்கமே அடிபட்டுப் போகிற தில்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: செக்குகளை மின்விசை மூலம் இயக்குவதன் மூலம் யாரும் வேலை இழக்கமாட்டார்கள். மாடுகளுக்குப் பதிலாக மின்விசை செக்கை இயக்குகிறது. அதோடு அவர்களுக்கு இதுவரை கிடைத்துவந்த ஊதியமும் கூட அதிகப் பட வாய்ப்பிருக்கிறது. இது கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் அகில இந்திய அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுத்தான் தமிழ்நாட் டிலும் நாம் இதைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]